**வழக்கில் விடுதலை பெற்றுத்தருவதாகவும், குண்டர் சட்டத்தில் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்காகவும் கூறி லஞ்சம் கேட்டு வாங்கிய திருச்சி மாநகர விபச்சார தடுப்புப்பிரிவு பெண் உதவி காவல் ஆய்வாளர், திருச்சி லஞ்ச ஒழிப்பு காவல் துறையினரால் கைது.**

கேரள மாநிலம், கோட்டயத்தை சேர்ந்த திரு.சரத் என்பவரின் மனைவி புகார்தாரர் திருமதி.அஜிதா என்பவர் திருச்சி, கரூர் பைபாஸ் சாலையில் ஆரணாஸ் கேரளா ஆயுர்வேதிக் ஸ்பா சென்டர் என்ற பெயரில் கேரளா ஆயுர்வேதிக் மசாஜ் சென்டரை நடத்தி வருகிறார். திருமதி.அஜிதா நடத்தும் ஸ்பாவிற்கு உதவியாக திரு.ராகுல் என்பவர் இருந்துள்ளார். கடந்த 06.04.2023 அன்று காலை திருச்சி, விபச்சார தடுப்பு காவல் உதவி ஆய்வாளர் திருமதி.ரமா அவர்கள் தலைமையில் திருமதி.அஜிதாவின் ஆரணாஸ் கேரளா ஆயுர்வேதிக் ஸ்பாவில் சோதனை செய்துவிட்டு, மேற்படி ஸ்பாவில் விபச்சாரம் நடப்பதாக தெரிவித்து, திருமதி.அஜிதா மற்றும் அவரது நண்பர் திரு.ராகுல் ஆகியோர் மீது கோட்டை காவல் நிலைய குற்ற எண்.486/2023—ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு, திருமதி.அஜிதாவை கைது செய்து திருச்சி மகளிர் சிறையில் அடைத்துள்ளார். பின்னர் காவல் உதவி ஆய்வாளர் திருமதி.ரமா, புகார்தாரர் திருமதி.அஜிதாவின் செல்போனில் பேசி 09.07.2023 அன்று இரவு 08.30 மணிக்கு சத்திரம் பஸ் ஸ்டாண்டு அருகே உள்ள தாஜ் கல்யாண மண்டபத்தின் அருகே சந்திக்கும்படி தெரிவித்ததின் பேரில், புகார்தாரர் திருமதி.அஜிதா, S.I திருமதி.ரமாவை சந்தித்து சார்ஜ்சீட் போட்டுவிட்டீர்களா என்று கேட்டபொழுது, S.I திருமதி.ரமா, திருமதி.அஜிதாவிடம், இது பார்மாலிட்டிக்கு போட்ட கேஸ்தான், ஒன்னும் பிரச்சனை இல்ல, கேசுக்கு சார்ஜ்சீட் போட்டுட்டேன், கோர்ட்டில் கேஸ் விசாரணைக்கு வரும் போது அஜிதாவிற்கு சாதகமா சாட்சிகளை சரிசெய்து தருகிறேன் என்றும், அதன்மூலம் விடுதலை ஆகலாம், கடையை பழையபடி நடத்த முடியும்னு சொல்லி, திருமதி.அஜிதாவிடம் லஞ்சமாக ரூ.10,000/— கொடுத்திடுங்க என்று கூறி, அஜிதாவின் வேண்டுகோளுக்கு இணங்க S.I திருமதி.ரமா அட்வான்ஸா ரூ.3,000/— லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாத புகார்தாரர் அஜிதா, அது குறித்து திருச்சி லஞ்ச ஒழிப்பு துறையினரிடம் 11.07.2023 அன்று புகார் மனுவை கொடுத்தன் பேரில், S.I திருமதி.ரமா மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. அதன் தொடர்ச்சியாக லஞ்ச ஒழிப்பு துறையினரின் ஆலோசனையின் பேரில் புகார்தாரர் அஜிதா திருச்சி மாநகர விபச்சார தடுப்பு பிரிவில் இன்று 17.07.2023 தேதி காலை S.I திருமதி.ரமாவை சந்தித்தபோது, புகார்தாரரிடம் S.I திருமதி.ரமா ரூ.3,000/— லஞ்சமாக கேட்டுப்பெற்ற போது திருச்சி, லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்பு துறை அலுவலர்களால் திருச்சி மாநகர விபச்சார தடுப்பு பிரிவு காவல் உதவி ஆய்வாளர், எதிரி திருமதி.ரமா, என்பவரை கைது செய்து காவல் உதவி ஆய்வாளரிடமிருந்து ரூ.3,000/— லஞ்ச பணத்தை கைப்பற்றினர். மேலும் S.I திருமதி.ரமாவின் இரு சக்கர வாகனத்தை சோதனை செய்தபோது, அந்த வாகனத்தில் கணக்கில் வராத பணம் ரூ.5,43,000/—மும் லஞ்ச ஒழிப்பு துறையால் கைப்பற்றப்பட்டது.